# தூத்துக்குடி நகரமன்றம்
# சாதாரணக் கூட்டப்பொருள்

2008ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 25 ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு 1920ஆம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் அட்டவணை III விதி எண் 2(1)ன் கீழ் தூத்துக்குடி நகராட்சி அலுவலகம் இராவ்பகதூர் குரூஸ்பர்னாந்து கட்டிடத்திலுள்ள கூட்ட மண்டபத்தில் நடைபெறும் சாதாரணக் கூட்டத்தில் கீழ்க்கண்ட பொருள்கள் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

## பொருள்கள்

**நகர்மன்றத் தலைவரால் கொண்டுவரப்படும் தீர்மானம்**

தூத்துக்குடி நகராட்சியை மாநகராட்சியாகத் தரம் உயர்த்தப்படும் என அறிவித்ததற்கும், தூத்துக்குடி நகருக்குட்பட்ட பகுதிகளில் பக்கிள்ஓடை திட்டத்தினை செயல்படுத்துவதற்காக முதற்கட்டமாக ரூ.33 கோடி ஒதுக்கீடு செய்ததற்கும் மாண்புமிகு தமிழக முதல்வர், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர், முயற்சி எடுத்த மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் மற்றும் முன்னாள் தூத்துக்குடி சட்டமன்ற உறுப்பினரும், நகர்மன்றத் தலைவரும் திராவிட முன்னேற்றக் கழக தூத்துக்குடி மாவட்டச் செயலாளர் ஆகியோருக்கு இம்மன்றம் தனது நன்றியை தெரிவித்துக் கொள்ள தீர்மானிக்க

**தீர்மானம் எண்: 184**

ஏகமனதாக நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

1. தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அவர்களது கடிதம் நகஎண் வ7. 57413/03 நாள் 11–4–2008 ஆம் தேதிய கடிதத்தில் சுற்றுலா வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரோச் பூஙகாவில் படகுத்துறை அமைக்க திருத்திய விரிவான திட்ட அறிக்கை சமர்ப்பிக்கவும் மேலும் மேற்கண்ட திட்ட மதிப்பீட்டில் அரசால் அனுமதிக்கப்பட்ட தொகை ரூ 16.00 லட்சம் போக கூடுதல் செலவினம் நகராட்சி பொது நிதியில் செய்ய மன்ற அனுமதி பெற்று அனுப்ப தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி விரிவான திட்ட மதிப்பீடு ரூ 17.50 இலட்சத்தில் தயாரிக்கப்பட்டுள்ளதின்படி மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு அறிக்கை சமர்ப்பிக்கவும் அரசால் ஒதுக்கீடு செய்யப்படும் நிதி ரூ. 16.00 இலட்சம் போக மீதித்தொகை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவினம் செய்யவும் மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகின்றது.

**அலுவலகக் குறிப்பு** அனுமதிக்கலாம்.

இ5. 14753/07

**தீர்மானம் எண்: 185**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

2. இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவிற்கு 2008–09ஆம் ஆண்டிற்கு தேவையான பொது சுகாதார தளவாடச் சாமான்கள் வாஙகுவதற்கு உத்தேச செலவுத்தொகை ரூ 2. 50 இலட்சம் (ரூபாய் இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) பொது நிதியிலிருந்து செலவு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

குறிப்பு 1. அனுமதிக்கலாம்

2. மன்ற அனுமதியை எதிர்நோக்கி நடவடிக்கை எடுத்ததையும் அனுமதிக்கலாம்.

எச்1. 6490/2008

**தீர்மானம் எண்: 186**

அலுவலகக் குறிப்பு 1, 2 அனுமதிக்கப்பட்டது

3. இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவிற்கு 2008–09ஆம் ஆண்டிற்கு தேவையான தேவையான கிருமிநாசினிகளான சுண்ணாம்புத்தூள் 40 டன்பிளிச்சிங பவுடர் 2000 கிலோ மற்றும் கருப்பு பினாயில் 1000 லிட்டர் வாஙகுவதற்கு உத்தேச செலவுத்தொகை ரூ 2. 00 இலட்சம் (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்) பொது நிதியிலிருந்து செலவு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

குறிப்பு 1. அனுமதிக்கலாம்

2. மன்ற அனுமதியை எதிர்நோக்கி நடவடிக்கை எடுத்ததையும் அனுமதிக்கலாம்.

எச்1. 6489/2008

**தீர்மானம் எண்: 187**

அலுவலகக் குறிப்பு 1, 2 அனுமதிக்கப்பட்டது

4. இந்நகராட்சிப் பகுதி சுப்பையா முதலியார்புரம் பிரையண்ட்நகர் மற்றும் தாமோதர நகர் பகுதியில் கிராவல் பரத்தி சாலை சரிசெய்யும் பணி பொதுநிதியில் செய்ய 12–3–08 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1) திரு எஸ். சுதர்சன் | மதிப்பீட்டிற்கு ரூ. 0. 16 %குறைவு | டேவணித் தொகை செலுத்தியுள்ளார் |
| 2) திரு எஸ். ரம்போலா | மதிப்பீட்டிற்கு ரூ 0. 88 % அதிகம் | டேவணித் தொகை செலுத்தியுள்ளார் |

**அலுவலகக் குறிப்பு**

1. மேற்படி பணிக்கு மன்றம் தனது தீர்மானம் எண் 38 தேதி 31–1–08ல் ரூ 1,50,000/–க்கு அனுமதி வழஙகியுள்ளது.

2. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மிகக் குறைவானதும் மதிப்பீடு விகிதத்திற்கு 0. 16% குறைவானதுமான திரு எஸ். சுதர்சன் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

ம.ப.எண். 217/06–07

**தீர்மானம் எண்: 188**

அலுவலகக் குறிப்பு 1, 2 ஒப்புக் கொள்ளப்பட்டது

5. இந்நகராட்சிப் பகுதி போல்பேட்டை கிழக்குத் தெருவில் கல்வெட் அமைக்கும் பணி பொதுநிதியில் செய்ய 12–3–08 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1) | திரு கே, பழனியப்பன் | மதிப்பீட்டிற்கு ரூ. 0. 35 %குறைவு | டேவணித் தொகை செலுத்தியுள்ளார் |
| 2) | திரு ஜே. சுரேஸ் ஜெயக்குமார் | மதிப்பீட்டிற்கு ரூ 0. 35 % அதிகம் | டேவணித் தொகை செலுத்தியுள்ளார் |

**அலுவலகக் குறிப்பு**

2. மேற்படி பணிக்கு மன்றம் தனது தீர்மானம் எண் 32 தேதி 31–1–08ல் ரூ 85,000/–க்கு அனுமதி வழஙகியுள்ளது.

2. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மிகக் குறைவானதும் மதிப்பீடு விகிதத்திற்கு 0. 35% குறைவானதுமான திரு கே. பழனியப்பன் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

ம.ப.எண். 219/07–08

**தீர்மானம் எண்: 189**

அலுவலகக் குறிப்பு 1, 2 ஒப்புக் கொள்ளப்பட்டது

6. இந்நகராட்சி பராமரிப்பிலுள்ள காமராஜ் நகரில் சாலையின் இருபுறஙகளிலும் பள்ளமாக இருப்பதால் அதனை சிவப்பு சரள் விரித்து மட்டம் செய்யும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ 22,200/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலகக் குறிப்பு:** மன்றம் அனுமதி வழஙகலாம்.

ம.ப.எண் 238/2007–08

**தீர்மானம் எண்: 190**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதி வழஙகப்பட்டது

7. இந்நகராட்சி பராமரிப்பிலுள்ள 42வது வார்டில் உள்ள டோபிகானா பகுதிகளில் சீரான முறையில் குடிநீர் விநியோகம் செய்ய மில்லர்புரம் நீர்த்தேக்கத்திலிருந்து நீரழுத்த குழாய் அமைக்க செய்யப்பட்ட மதிப்பீடு ரூ 3,00,000/– க்கு (ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்)க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** மன்றம் அனுமதிக்கலாம்.

மபஎண் 256/2007–08

**தீர்மானம் எண்: 191**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

8. இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட பகுதி பிரையண்ட்நகர் 3வது தெரு மற்றும் 6வது தெரு போல்டன்புரம் சந்து மற்றும் லெவஞ்சிபுரம் பகுதியில் உள்ள சாலைகள் மிகவும் பழுதடைந்து மோசமான நிலையில் உள்ளது. இந்த சாலையை தற்சமயம் கிராவல் நிரப்பி சரிசெய்யும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ 1,70,000/–க்கு (ரூபாய் ஒரு லட்சத்து எழுபதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** மன்றம் அனுமதிக்கலாம்.

மபஎண் 250/2007–08

**தீர்மானம் எண்: 192**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

9. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதி வார்டு எண் 1 அமைந்துள்ள புதிய பேருந்து நிலையத்தின் மேற்கு பக்கமாக சென்று 4ம் கேட் சாலையில் இணையும் போல்பேட்டை மேற்கு சாலை மிகவும் சேதமடைந்துள்ளதால் சாலையை கிராவல் நிரப்பி சரிசெய்யும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ 1,20,000/—க்கு (ரூபாய் ஒரு இலட்சத்து இருபதாயிரம்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** மன்றம் அனுமதிக்கலாம்.

மபஎண் 247/2007—08

**<u>தீர்மானம் எண்: 193</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

10. இந்நகர் டூவிபுரம் மேற்கு 10வது தெரு மங்களபுரம் மற்றும் மகிழ்ச்சிபுரம் பகுதிகளுக்கு மில்லர்புரம் பகுதியில் இருந்து ஓடை பகுதி வழியாக குடிநீர் விநியோகம் சீரான முறையில் செய்ய மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பணி செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட பணி செய்யும் போது R.M வால்வினை பாலத்தின் குறுக்கே M. S. angle அமைத்து கிளாப்செட் அமைக்க வேண்டி உள்ள காரணத்தினால் கூடுதல் செலவினம் ரூ 20,850/— ஏற்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட பணிக்கு தயார் செய்யப்பட்ட திருத்திய மதிப்பீடு ரூ 30850/— மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலகக் குறிப்பு**

1. திருத்திய மதிப்பீடு ரூ30850/—க்கு மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. கூடுதல் செலவீனம் ரூ 20,850/— க்கு மன்றம் அனுமதி அளிக்கலாம்.

மபஎண் 203/2006—07

**<u>தீர்மானம் எண்: 194</u>**

அலுவலகக் குறிப்பு 1, 2 அனுமதி வழஙகப்பட்டது

11. இந்நகராட்சிப் பகுதியில் மழை வெள்ளத்தால் சாலையில் தேஙகிய நீரை அப்புறப்படுத்தும் பணிக்கு உள்ளூர் விலைப்புள்ளி கோரப்பட்டதில் வந்துள்ள விலைப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு.

| | | |
|---|---|---|
| 1 | S.D.ஜாண்<br>F.C.I குடோன் எதிரில் பாளையஙகோட்டை ரோடு<br>தூத்துக்குடி—8 | ரூ 1190/—<br>ஒரு மணி நேரத்திற்கு |
| 1 | M.மனோ<br>112F/12 Ist சஙகர் காலனி, 3ம் மைல், தூத்துக்குடி | ரூ 1210/—<br>ஒ ரு மணி நேரத்திற்கு |
| 3 | ராஜேந்திரன்<br>வாட்டர் டேஙக் எதிரில், திரு வி.க. நகர், தூத்துக்குடி—8 | ரூ 1225/—<br>ஒ ரு மணி நேரத்திற்கு |

வரப்பட்ட விலைப்புள்ளிகளில் மிக குறைவாக கொடுத்துள்ள திரு S.D.ஜாண்அவர்களது விலைப்புள்ளியினை அஙகீகரிக்கலாம்.

மேலும் மேற்கண்ட வேலையினை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் உடனடியாக போர்கால அடிப்படையில் வேலை செய்து முடிக்க தெரிவித்துள்ளதினிமித்தம் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியினை எதிர்நோக்கி குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு S.D.ஜாண் F.C.I குடோன் எதிரில் பாளையஙகோட்டை ரோடு, தூத்துக்குடி—8 அவர்களுக்கு வேலை உத்திரவு வழஙகி வேலையினை செய்து முடித்ததையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>அலுவலகக் குறிப்பு:</u>** அனுமதிக்கலாம்.

மப எண் 257/2007–08

**<u>தீர்மானம் எண்: 195</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

12. இந்நகராட்சி பராமரிப்பிலுள்ள மேல சண்முகபுரம் , பெருமாள் தெரு மற்றும் புதுக்கிராமம் பகுதியில் மழைநீர் வடிகால் இல்லாததால் மழைக் காலஙகளில் மழைநீர் தேஙகி பொதுமக்களுக்கு மிகவும் இடையூராக உள்ளது. எனவே மேற்படி சாலைகளில் மழைநீர் வடிகால் கட்டும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ 2,10,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு:</u>** மன்றம் அனுமதி வழஙகலாம்.

ம.ப.எண் 1/2008–09

**<u>தீர்மானம் எண்: 196</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதி வழஙகப்பட்டது

13. இந்நகராட்சிக்கு சொந்தமான ஸ்டேட் பாஙக் காலனி பகுதியிலுள்ள வடிகால் பழுதடைந்துள்ளது. எனவே பழுதடைந்ததை சரிசெய்யவும் மற்றும் அப்பகுதியில் புதியதாக வடிகால் இல்லாத இடத்தில் வடிகால் கட்டவும் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூபாய் 5,60,000/– (ரூபாய் ஐந்து இலட்சத்து அறுபதாயிரத்திற்கு) மன்றத்திற்கு அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** மன்றம் அனுமதிக்கலாம்.
2008/09 ஆண்டிற்குரிய வரும் நிதியாண்டு வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டில் மேற்காண் செலவினை மேற்கொள்ளலாம்.

மபஎண் 214/2007–08

**<u>தீர்மானம் எண்: 197</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

14. தூத்துக்குடி நகராட்சியில் 2007–08ஆம் கல்வி நிதித்திட்டத்தின் கீழ் வடக்கு வாணியன்விளை நகராட்சிப் பள்ளியில் புதியதாக கூடுதல் கட்டிடம் அமைக்கும் பணி செய்ய மன்றம் தனது தீர்மானம் எண் 482 நாள் 29–8–2007ல் ரூ 9,40,000/– மதிப்பீட்டில் பணி செய்ய அனுமதிக்கப்பட்டதின்படி 13–2–2008 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பெற்ற கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகின்றது.

| வஎண் | ஒப்பந்தக்காரர் பெயர் | விலை விகிதம் மதிப்பீட்டை விட கூடுதல்/குறைவு | டேவணித்தொகை |
|---|---|---|---|
| 1 | திரு எஸ். ரம்போலா, ஒப்பந்ததாரர் | 6. 71% அதிகம் | செலுத்தியுள்ளார் |
| 2 | திரு எஸ். சுதர்சன் ஒப்பந்ததாரர் | 4. 95% அதிகம் | செலுத்தியுள்ளார் |

**அலுவலகக் குறிப்பு**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பந்ததாரர் திரு எஸ். சுதர்சன், ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட 4. 95% மட்டும் விலை விகிதம் அதிகமாக கொடுத்துள்ளார். மேலும் இப்பணிக்கு 2007–08க்கு பொதுப்பணித்துறையின் தரவிலைப் பட்டியலின்படி மதிப்பீடு தயாரிக்கப்பட்டு ஒப்பந்தப்பள்ளி கோரப்பட்டுள்ளது. மேலும் தற்போது கட்டுமானப் பொருள்களின் விலை உயர்ந்துள்ளது. எனவே பணியின் அவசியம் கருதி பொறியியல் கையேடு பக்கம் 9 பத்தி எண் 27. 2ல் தெரிவிக்கப்பட்டுள்ளபடி மதிப்பீட்டை விட விலை விகிதம் 5% க்கு

குறைவாக உள்ளதால் மேற்கண்ட ஒப்பந்ததாரர் திரு எஸ். சுதர்சன் ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட 4. 95 % மட்டும் விலை விகிதம் அதிகமாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகின்றது.

மபஎண் 107/2007–08

**தீர்மானம் எண்: 198**

அலுவலகக் குறிப்புப்படி ஏற்றுக்கொள்ளப்பட்டது

15. தூத்துக்குடி நகராட்சியில் 2007–08 பொது நிதித்திட்டத்தின் கீழ் இந்நகருக்கு வரும் தன்னோட்ட 500 எம்.எம். குடிநீர் குழாயில் ஏற்பட்டுள்ள கசிவை ரூ 75,000/– மதிப்பீட்டில் சரி செய்யும் பணி செய்ய 27–2–2008 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பெற்ற கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகின்றது.

| வஎண் | ஒப்பந்தக்காரர் பெயர் | விலை விகிதம் மதிப்பீட்டை விட கூடுதல்/குறைவு | டேவணித்தொகை |
|---|---|---|---|
| 1 | திரு ஜி. பார்த்தீபன், ஒப்பந்ததாரர் | 0.18 %குறைவு | செலுத்தியுள்ளார் |
| 2 | திரு எம். தாமஸ் , ஒப்பந்ததாரர் | 0. 91% அதிகம் | செலுத்தியுள்ளார் |

**அலுவலகக் குறிப்பு**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பந்ததாரர் திரு ஜி. பார்த்தீபன், ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட 0.18% விலைவிகிதம் குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

மபஎண் 241/2007–08

**தீர்மானம் எண்: 199**

அலுவலகக் குறிப்புப்படி ஒப்புக்கொள்ளப்பட்டது

16. இந்நகராட்சிக்கு சொந்தமான நகராட்சி வளாக கட்டிடத்தில் நகர்மன்ற தலைவர் அறையில் மராமத்து மற்றும் பராமரிப்பு பணி செய்யும் பணிக்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ 1,65,000/–க்கு மன்றதிதின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:** மன்றம் அனுமதி வழஙகலாம்.

ம.ப.எண் 252/2007–08

**தீர்மானம் எண்: 200**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதி வழஙகப்பட்டது

17. தூத்துக்குடி நகராட்சியில் 2007–08 பூஙகா மற்றும் விளையாட்டு பொருள்கள் மேம்பாடு திட்டத்தின் கீழ் சஙகரநாராயணன் பூஙகா மேம்பாட்டு பணி செய்ய மன்றம் தனது தீர்மானம் எண் 718 நாள் 24–12–2007ல் ரூ 290000/– மதிப்பீட்டில் பணி செய்ய அனுமதிக்கப்பட்டதின்படி 19–2–2008 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பெற்ற கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகின்றது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | விலை விகிதம் மதிப்பீட்டை விட கூடுதல்/ குறைவு | டேவணித் தொகை |
|---|---|---|---|
| 1. | திருமதி பி.கோமதி, ஒப்பந்ததாரர் | 0.81% குறைவு | செலுத்தியுள்ளார் |
| 2. | திரு பி.கண்ணன், ஒப்பந்ததாரர் | 0.60% குறைவு | செலுத்தியுள்ளார். |

**அலுவலகக் குறிப்பு**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பந்ததாரா் திருமதி பி.கோமதி, ஒப்பந்ததாரா் மதிப்பீட்டை விட 0.81% விலைவிகிதம் குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக் கொள்ளலாம்.

இ1/22388/07

**<u>தீா்மானம் எண்: 201</u>**

அலுவலகக் குறிப்புப்படி ஒப்புக் கொள்ளப்பட்டது

18. சென்னை நகராட்சி நிா்வாக ஆணையா் அவா்களது கடிதம் ந.க.எண் CMA/ITC/21066/07 நாள் 8–4–08ந் தேதிய கடிதம் மற்றும் நகராட்சி நிா்வாக மண்டல இயக்குநா் தொலைபேசி செய்தி நாள் 8–4–08ல் தெரிவிக்கப்பட்டதன்படி தூத்துக்குடி நகராட்சி ஆணையா் அவா்களுக்கு ஏற்கனவே Signature Card வாஙக விண்ணப்பித்தது போக கூடுதல் அலுவலா்களுக்கும் வாஙக அறிவுரை வழஙகப்பட்டதன்படி நகராட்சி பொறியா், நகரமைப்பு அலுவலா் மற்றும் நகா்நல அலுவலா்களுக்கு Signature Card 3 எண்ணம் வாஙகுவதற்கும் அதற்கான தொகை (ரூ.1090 x 3) ரூ.3270/– செலுத்துவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகின்றது.

**<u>அலுவலகக் குறிப்பு:</u>** அனுமதிக்கலாம்.

இ1/21326/07

**<u>தீா்மானம் எண்: 202</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

19. தூத்துக்குடி நகராட்சி பொது நிதியின் கீழ் எரிவாயு எரிகூடம அமைந்துள்ள இடத்தில் ரூ.16.00 லட்சம் மதிப்பிலான சுற்றுச் சுவா் அமைக்கும் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை செய்தி மற்றும் மக்கள் தொடா்பு அலுவலா் தூத்துக்குடி மூலம் கீழ்க்கண்ட இரண்டு நாளிதழ்களில் விளம்பரம் செய்யவும் அதற்கான விளம்பரக் கட்டணம் செலுத்துவதற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகின்றது.

| | | | |
|---|---|---|---|
| 1) | தினத்தந்தி | – | ரூ.2324/– |
| 2) | தினகரன் | – | ரூ.3390/– |
| | | | ரூ.5714/– |

**<u>அலுவலகக் குறிப்பு:</u>** அனுமதிக்கலாம்.

இ1/19231–1/06

**<u>தீா்மானம் எண்: 203</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

20. தூத்துக்குடி நகராட்சியின் 2வது மாநில நிதிக்குழு ஆணையில் 2006–07 சேமநலநிதி மற்றும் சமன்பாடு நிதியின்கீழ் பணிகள் செய்ய ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை செய்தி மற்றும் மக்கள் தொடா்பு துறை அலுவலா், தூத்துக்குடி அவா்கள் மூலம் கீழ்க்கண்ட இரண்டு தமிழ் நாளிதழ்களில் விளம்பரம் செய்வதற்கும் அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகின்றது.

1) தினமலா் – ரூ.1350/–

2) தினத்தந்தி – ரூ.3154/–

ரூ.4504

**<u>அலுவலகக் குறிப்பு:</u>** அனுமதிக்கலாம்.

இ1/17132/07

**<u>தீர்மானம் எண்: 204</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

21. தூத்துக்குடி நகர்பகுதியில் கடந்த ஒரு மாத காலமாக பெய்த கன மழையின் காரணமாக நகரில் பல இடஙகள் தண்ணீர் தேஙகியும், சாலைகள் உடைப்பு ஏற்பட்டும் பெருத்த சேதம் ஏற்பட்டது. அதன்படி மேற்கண்ட வெள்ள சேதஙகளை மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர், நகராட்சி நிர்வாக இணை ஆணையர், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் மற்றும் தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் நகர்மன்றத் தலைவர் அவர்களது ஆலோசனையின்படி உடனடி நிவாரணப் பணிகள் மேற்கொள்ள அறிவுரை வழஙகப்பட்டதின்படி கீழ்க்கண்ட பணிகள் உடன் செய்து முடிக்கவும் அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகின்றது.

| வ. எண் | பணியின் விவரம் | உத்தேச மதிப்பீட்டு விவரம் (லட்சத்தில்) |
|---|---|---|
| 1. | பக்கிள் ஓடையை பொக்ளின் இயந்திரம் மூலம் தூர்வாறும் பணி | ரூ.10.25 |
| 2. | நகர்பகுதிகளில் ஆஙகாஙகே தேஙகிய மழைநீரை வெளியேற்ற JCB இயந்திரம் மூலம் தற்காலிக கச்சா வடிகால் ஏற்படுத்தும் பணி | ரூ.0.60 |
| 3. | நகரில் தாழ்வான பகுதிகளில் தேஙகியுள்ள மழைநீரை வெளியேற்ற தனியார் ஆயில் எஞ்ஜின் மூலம் (டீசல் மற்றும் ஆள் கூலி உட்பட) செய்த பணி | ரூ.4.10 |
| 4. | வெள்ள சேதஙகளை வீடியோ மற்றும் போட்டோ எடுத்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கு | ரூ.0.15 |
| | | ரூ.15.10 லட்சம் |

**<u>அலுவலகக் குறிப்பு:</u>** 1) அனுமதிக்கலாம்.
2) அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி போர்கால அடிப்படையில் பணியினை செய்து முடித்து செலவினம் மேற்கொண்டதற்கும் மன்றம் அஙகீகரிக்கலாம்.

இ1/4774/08

**<u>தீர்மானம் எண்: 205</u>**

அலுவலகக் குறிப்பு 1 அனுமதிக்கப்பட்டது
அலுவலகக்குறிப்பு 2 அஙகீகரிக்கப்பட்டது

22. தூத்துக்குடி நகராட்சி வல்லநாடு தலைமை நீரேற்று நிலையத்தில் ரூ.46.00 லட்சம் மதிப்பீட்டிலான குடிநீர் திட்டத்தின்கீழ் டிரான்ஸ்பார்மர் மாற்றி அமைக்கும் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை இயக்குனர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை அவர்கள் மூலம் தமிழ் மற்றும் ஆஙகில நாளிதழ்களில் கீழ்க்கண்ட நிறுவனம் மூலம் விளம்பரம்

செய்வதற்கும் அதற்கான விளம்பரக் கட்டணம் செலுத்துவதற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகின்றது.

1) மெசர்ஸ் மது அட்ஸ், சென்னை – ரூ.5097/–

இ1/7356/06

**தீர்மானம் எண்: 206**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

23. தூத்துக்குடி நகரில் குடிநீர் மேம்பாட்டு திட்டம், பாதாளச் சாக்கடை திட்டம், வடிகால் அமைக்கும் பணிகள், பேருந்து நிலையங்கள் மேம்பாடு பணிகள் மற்றும் மேம்பாட்டு திட்டங்களுக்காக தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதி நிறுவனம் மூலம் சிட்டி கார்பரேட் கம்பிசினஸ் பிளான் திட்டத்தின்கீழ் ரூ.10928.32 லட்சதிற்கும் (பத்து லட்சு தொள்ளாயிரத்து இருபத்தெட்டு லட்சம்) கருத்துரு தயார் செய்யப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகின்றது. மேலும் இத்திட்டங்களை செயல்படுத்துவதற்கு மேற்கண்ட நிறுவனத்துடன் இந்நகர்மன்றத்திற்காக ஆணையர் அவர்கள் ஒப்பந்தம் செய்து கொள்வதற்காக அனுமதிக்கு வைக்கப்படுகின்றது.

**அலுவலகக் குறிப்பு:** அனுமதிக்கலாம்.

இ1/25544/07

**தீர்மானம் எண்: 207**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

24. தூத்துக்குடி நகராட்சி திரேஸ்புரம் நகர்நல மையம் மருத்துவ அலுவலர் அவர்கள் 8.2.08ந் தேதிய கடிதத்தில் கோரியதின்படி மேற்படி மையத்திற்கு தேவையான கீழ்க்கண்ட உபகரணங்கள் தூத்துக்குடி சர்வோதய சங்கத்தில் நேரடியாக வாங்கி வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகின்றது.

| வ. எண் | பொருள் விபரம் | எண்ணம் | விலை விபரம் |
|---|---|---|---|
| 1. | மரமேஜை 3" x 2 | 1 (1 x 3250) | ரூ. 3250/– |
| 2. | மரமேஜை 5" ஓ 3" | 1 (1 x 4830) | ரூ.4830/– |
| 3. | சாய்வு நாற்காலி | 4 ( 4 x 1050) | ரூ.4200/ |
| 4. | மர பெஞ்ச் 6 x 1/4 | 3 (3 x 2600) | ரூ.7800/– |
| 5. | மர ஸ்டூல் 1 1/2 அடி உயரம் | 4 (4 x 700) | ரூ.2800/– |
| 6,. | மர ஸ்டூல் ½ அடி உயரம் | 1 (1 x 375) | ரூ.375/– |
| | | | ரூ.23255/– |

**அலுவலகக் குறிப்பு:** 1) அனுமதிக்கலாம்.
2) செலவினம் பகுதி 2 திட்டம் 2007–08ன் தாய் சேய் நல விடுதி மேம்பாடு நிதியில் மீதத் தொகை செலவினம் மேற்கொள்ள அங்கீகரிக்கலாம்.

இ1/19231/06

**தீர்மானம் எண்: 208**

அலுவலகக் குறிப்பு 1 அனுமதிக்கப்பட்டது
அலுவலகக்குறிப்பு 2 அங்கீகரிக்கப்பட்டது

**25.** தூத்துக்குடி நகராட்சி பகுதியில் கடந்த ஒரு மாத காலமாக பெய்த மழையின் காரணமாக சேதமடைந்த விவரஙகள் மற்றும் நிவாரணப் பணிகள் நடைபெறுவதை புகைப்படம் எடுத்து அறிக்கை செய்ய அவசர அவசியம் கருதி உள்ளூர் நிறுவனம் நேரடியாக பெறப்பட்ட விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகின்றது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | விலை விபரம் ஒன்றுக்கு முதல் காப்பி | நகல் ஒன்றுக்கு |
|---|---|---|---|
| 1. | M/s. மாருதி டிஜிட்டர் ஸ்டுடியோ, தூத்துக்குடி | ரூ.25/– | ரூ.15/– |
| 2. | M/s. உதயம் ஸ்டுடியோ, தூத்துக்குடி | ரூ.23/– | ரூ.15/– |
| 3. | M/s. சித்ரா ஸ்டுடியோ, தூத்துக்குடி | ரூ.20/– | ரூ.10/– |

**அலுவலகக் குறிப்பு:** மேற்கண்ட விலைப்புள்ளிகளில் மெசர்ஸ் சித்ரா ஸ்டுடியோ, தூத்துக்குடி அவர்களது குறைவான விலை விகிதத்தினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

இ1/4774/08

**தீர்மானம் எண்: 209**

அலுவலகக் குறிப்புப்படி அங்கீகரிக்கப்பட்டது

**26.** இந்நகராட்சி பகுதியில் மழை வெள்ளத்தால் சாலையில் தேஙகிய நீரை அப்புறப்படுததும் பணிக்கு உள்ளூர் விலைப்புள்ளி கோரப்பட்டதில் வந்துள்ள விலைப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு

| | | |
|---|---|---|
| 1. | திரு ஜே,.விஜயன், நகராட்சி ஒப்பந்தகாரர் | ரூ.1850/– டீசல் உட்பட ஒரு நாள் வாடகை |
| 2. | திரு ஜி.பார்த்திபன், நகராட்சி ஒப்பந்தகாரர் | ரூ.1700/– டீசல் உட்பட ஒரு நாள் வாடகை |
| 3. | ஜே.கே.டிரேடர்ஸ்,<br>6/7, நகராட்சி மார்க்கெட், சிதம்பரநகர் | ரூ.1800/– டீசல் உட்பட ஒரு நாள் வாடகை |

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட மிகக் குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்தகாரர் திரு ஜி.பார்த்திபன் அவர்களின் விலப்புள்ளியினை அஙகீகரிக்கலாம். மேலும் மேற்கண்ட பணியினை இயற்கை சீற்றத்தின் காரணமாக அவசர அவசியத்தை கருதி போர்கால அடிப்படையில் செய்து முடிக்க மாவட்ட ஆட்சியர் அவர்களின் அறிவுரை வழஙகியதின் பேரில் மன்ற அனுமதியை எதிர்நோக்கி குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு ஜி.பார்த்திபன் அவர்கள் வேலை வழஙகி செய்து முடித்ததை மன்றம் அனுமதிக்கலாம்.
**அலுவலகக் குறிப்பு:** அனுமதிக்கலாம்.

இ1/4774/08

**தீர்மானம் எண்: 210**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

**27.** இந்நகராட்சியின் மூலம் மழைநீர் தேஙகியுள்ள இடஙகளில் JCP இயந்திரம் மூலம் மழைநீரை வெட்டி வடிக்க 22–3–08 அன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் வந்துள்ள விலைப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு

| வ. எண் | பெயர் | ஒரு மணி நேரத்திற்கான வாடகை ரூ. |
|---|---|---|

| | | |
|---|---|---|
| 1 | திரு எஸ்.டி.ஜான், FCI குடோன் எதிரில், பாளையங்கோட்டை ரோடு, தூத்துக்குடி | 590.00 |
| 2. | திரு கே.ராஜா எர்த் மூவர்ஸ் பி.எம்.அரசரடி | 625.00 |
| 3. | ஸ்ரீ வெட்காளியம்மன் M.L.S. ஆட்டோ ஒர்க்ஸ், எட்டையாபுரம் ரோடு, குறிஞ்சி நகர் 9வது தெரு, தூத்துக்குடி–2 | 610.00 |

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

வரப்பெற்றுள்ள விலைப்புள்ளிகளில் குறைவாகவும் மதிப்பீட்டை விட குறைவானதும் கொடுத்துள்ள திரு எஸ்.டி.ஜான் FCI குடோன் எதிரில், பாளையங்கோட்டை ரோடு அவர்களின் விலைப்புள்ளியினை அங்கீகரிக்கலாம். மேலும் மேற்கண்ட வேலையினை வெள்ள நிவாரணம் அவசர அவசியம் கருதி போர்க்கால அடிப்படையில் செய்ய வேண்டியிருப்பதால் மன்ற அனுமதியினை எதிர்நோக்கி குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு எஸ்.டி.ஜாண் அவர்களுக்கு வேலை உத்திரவு வழங்கி வேலையினை செய்து முடித்ததையும் அனுமதிக்கலாம்.

இ1/4774/08

**<u>தீர்மானம் எண்: 211</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

28. இந்நகராட்சிக்கு சொந்தமான சத்திரம் தெரு கழிவுநீர் நீரேற்று நிலையத்தில் அமைந்துள்ள (5 கு.வே. திறன் பம்ப்–பில் உள்ள Carter-bin yoke உடைந்து போய் ஓடிக் கொண்டிருக்கிறது. மேற்படி கார்டர் பின் யோக் மாற்ற உத்தேசமாக ஆகும் செலவுத் தொகை ரூ.3500/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு:</u>** மன்றம் அனுமதிக்கலாம்.

இ3/002628/08

**<u>தீர்மானம் எண்: 212</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

29. இந்நகராட்சிக்கு சொந்தமான இராஜாஜி பூங்கா நீரேற்று நிலையத்தில் அமைந்துள்ள மின் மோட்டார் மற்றும் மின் துவக்கிகளுக்கான ஸ்பேர் மோட்டார், மின் துவக்கிகள் வாங்குவதற்கு 27–2–08ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் மூன்று நிறுவனத்தாரிடம் இருந்து ஒப்பந்தப்புள்ளிகள் கிடைக்கப்பெற்றது. பெறப்பட்ட மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் மெசர்ஸ் ஸ்ரீராம் எஞ்ஜினியரிங அண்ட் எலக்ட்ரிக்கல்ஸ் தூத்துக்குடி என்ற நிறுவனத்தினர் கொடுத்த விலைப்புள்ளியில் ஒப்பந்தப்புள்ளி நமூனா எதுவும் இல்லாமல் லெட்டர்பேடில் விலை விகிதம் கொடுத்து இருந்தனர். மேலும் தொழிற்நுட்ப விபரஙகள் எதுவும் இணைக்கப்படவில்லை. எதுவும் முறைப்படி இல்லையாதலால் மேற்படி ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்பட்டது. மீதமுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வஎண் | வேலை விபரம் | ரவ்கால் அண்ட்கோ, மதுரை | ஆனந்தா எண்டர்பிரைசர்ஸ், |
|---|---|---|---|

| | | | மதுரை |
|---|---|---|---|
| 1 | 25 கு,வேக, திறன் 3 பேஸ் ஏசி 4 பேஸ் 1500 ஆர்பிஎம் ஸ்குள் கேஜ் இன்டக்சன் மோட்டார் | 57600/–ஒன்றிற்கு | 59000/– ஒன்றிற்கு |
| 2 | ஆட்டோமேட்டிக் ஏர்பிரேக் ஆட்டோ டிரான்ஸ்பார்மர் ஸ்டாட்டர் | 54900/– ஒன்றிற்கு | 55440/–ஒன்றிற்கு |
| 3 | டிஸ் மான்டிலிங சார்ஜஸ் பார் ஸ்டாட்டர் | 900/– ஒன்றிற்கு | 1200/– ஒன்றிற்கு |

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த விலை விகிதம் கொடுத்துள்ள ரவ்கால் அண்ட்கோ மதுரை விலை விகிதம் வாட்டர் போர்டு ஷெட்யூல் ஆட்ரேட் 07. 08ஐ விட குறைவாகவும் மற்றும் உள்ளூர் மார்கெட் நிலவரத்தையும் ஒத்துள்ளதால் மன்றம் அங்கீகரிக்கலாம்.

இ3. 022311/07

**<u>தீர்மானம் எண்: 213</u>**

அலுவலகக் குறிப்புப்படி அங்கீகரிக்கப்பட்டது

30. தூத்துக்குடி நகர்புற பகுதியில் தூத்துக்குடி நகராட்சியால் தற்போது 7723 தெரு விளக்குகள் பராமரிக்கப்பட்டு வருகின்றது. இதில் 28 வார்டுகள் தனியார் மூலமும் 23 வார்டுகள் துறைமூலமும் பராமரிக்கப்பட்டு வருகின்றது. இதன் விபரம் வருமாறு.

| வஎண் | விளக்குகள் | தனியார் மூலம் பராமரிக்கப்படுபவை | துறைமூலம் பராமரிக்கப்படுபவை | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | குழல் விளக்குகள் | 3857 | 2781 | 6638 |
| 2 | சோடியம் ஆவி விளக்கு | 706 | 303 | 1009 |
| 3 | உயர்மின் கோபுர விளக்கு | 2 | – | 2 |
| 4 | மெர்குரி விளக்கு | 74 | – | 74 |
| | மொத்தம் | 4639 | 3084 | 7723 |

தற்போது நகரின் விரிவாக்கப்பகுதிகளுக்கும் வார்டுகளின் தேவைக்கு ஏற்ப விளக்குகள் பொருத்தப்பட்டு இருப்பதாலும் தெருவிளக்குகள் எண்ணிக்கை கூடி உள்ளதால் துறை மூலம் மூன்று டிவிஷன் பணியாளர் கொண்டு பராமரிப்பு செய்யப்பட்டு வருகின்றது. மேலும் இப்பணியாளர்கள் லம் நகராட்சி அலுவலகம் கணனி மையம், திருமண மண்டபம், நகராட்சி மருத்துவ மனைகள் மற்றும் அலுவலக கட்டிடங்கள் பராமரிப்பு செய்ய வேண்டி உள்ளது. அரசினால் நிர்ணயிக்கப்பட்டுள்ள அளவுகோலுக்கும் கூடுதலாக தற்போது துறைமூலம் பராமரிக்கப்பட்டு வருவதால் தெரு விளக்குகள் சம்பந்தமாக வரும் புகார்கள் உடனடியாக சரிசெய்ய முடியாமல் தேக்கம் அடையும் நிலை உள்ளது. இதனை தவிர்க்க கடற்கரை பகுதிகளை சேர்ந்த வார்டுகள் 11,12, 13, 14, 15 மற்றும் 16இல் உள்ள குழல் விளக்குகள் 634, சோடியம் ஆவி விளக்குகள் 91 என மொத்தம் 725 விளக்குகளை தனியார் நிறுவனத்தின் மூலம் பராமரித்துக்கொள்ள அனுமதி வேண்டப்படுகின்றது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

1. தெருவிளக்கு பராமரிப்பின் அவசியம் கருதி வார்டு எண் 11 முதல் 16 வரை உள்ள தெருவிளக்குகள் தனியார் மூலம் பராமரித்துக்கொள்ள அனுமதிக்கலாம்.
2. தற்போது தெருவிளக்குகளை பராமரித்து வரும் சுதா இன்ஜினியரிங, திருநெல்வேலி நிறுவனத்தின் மூலம் ஏற்கனவே மன்றத்தால் அனுமதிக்கப்பட்ட விலை விகிதத்தில்

நகராட்சி நிர்வாக ஆணையரின் விதிமுறைகளுக்கு உட்பட்டு பராமரித்துக்கொள்ள அனுமதிக்கலாம்.

இ3. 016971/07

**<u>தீர்மானம் எண்: 214</u>**

அலுவலகக் குறிப்பு 1, 2 அனுமதிக்கப்பட்டது

31. சமீபத்தில் பெய்த பெருமழை காரணமாக இந்நகராட்சி கழிவுநீர் லாரிகளின் தொடர் பயன்பாட்டால் பழுதான ஹெறவி டியூட்டி ஹேறாஸ் 30 மீட்டர் விநியோகம் செய்ய 04–04–08ல் விலைப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளியில் குறைந்த விலைப்புள்ளியாக ரூ 7,800/க்கு கொடுத்துள்ள மெசர்ஸ் M.P.M. பிரதர்ஸ், தூத்துக்குடி நிறுவனத்தின் மூலம் பெற்றுக்கொண்டமைக்கும் அவசியம் கருதி நகராட்சிகள் சட்டம் 15–ன் கீழ் பணிகள் மேற்கொண்டது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகின்றது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>** பதிவு செய்யலாம்.

நகஎண் 7082/2008/இ1

**<u>தீர்மானம் எண்: 215</u>**

அலுவலகக் குறிப்புப்படி பதிவு செய்யப்பட்டது

32. இந்நகராட்சி ஜெயராஜ் ரோடு வணிக வளாக கடை எண் 3க்கு 3–4–2008ம் தேதி நடைபெற்ற ஏல/ ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

1) ஆர். தனமுருகன்
   த/பெ ராமமூர்த்தி
   1/316பி மீளவிட்டான், சின்னகண்ணுபுரம் .. ரூ 850/–
2) சி. முத்துகல்பனா
   360/16 டுவிபுரம் மெயின் ரோடு, தூத்துக்குடி .. ரூ1070/–

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

ஜெயராஜ் ரோடு கடை எண் 3க்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருமதி சி. முத்துகல்பனா என்பவரின் கேள்வித்தொகை ரூ 1070/– என்பதாகும். மேற்படி கடை பலமுறை ஏலம் விட்டும் ஒப்பந்தப்புள்ளி கோரியும் இதுவரை எவரும் ஏலத்தில் எடுக்க முன்வரவில்லை. எனவே மேன்மேலும் நகராட்சிக்கு ஏற்படும் வருவாய் இழப்பை தவிர்க்கும் பொருட்டு திருமதி சி. முத்துகல்பனா என்பவரின் மாத வாடகை ரூ 1070/–ஐ ஏற்று கடையின் உரிமத்தினை அன்னார் பெயரில் வழளஙக அனுமதிக்கலாம்.

அ16. 6676/08

**<u>தீர்மானம் எண்: 216</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

33. இந்நகராட்சி ஜெயராஜ் ரோடு வணிக வளாக கடை எண் 5க்கு 3–4–2008ம் தேதி நடைபெற்ற ஏல/ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

1. திரு D.A. ரவீந்திரன்

த/பெ து. அழகுபாண்டி
6, டூவிபுரம் 2ம் தெரு, தூத்துக்குடி ரூ 900/— (மாத வாடகை)

2. ஆர். பால்ராஜ்
த/பெ பி. ராமசாமி
289 ரைஸ்மில் தெரு
வி.இ. ரோடு, தூத்துக்குடி ரூ 1080/—(மாத வாடகை)

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

ஜெயராஜ் ரோடு வணிக வளாக கடை எண் 5க்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் திரு ஆர். பால்ராஜ் என்பவரின் உயர்ந்த கேள்வித்தொகை ரூ 1080/— என்பதாகும். மேற்படி கடைக்கு பலமுறை ஏலம் விட்டும் ஒப்பந்தப்புள்ளி கோரியிம் இதுவரை எவரும் ஏலம் எடுக்க முன்வரவில்லை. எனவே மேன்மேலும் நகராட்சிக்கு ஏற்படும் வருவாய் இழப்பை தவிர்க்கும் பொருட்டு திரு ஆர். பால்ராஜ் என்பவரின் மாத வாடகை ரூ 1080/—ஐ ஏற்று கடையின் உரிமத்தினை அன்னாரின் பெயரில் உரிமம் வழஙக மன்றம் அனுமதிக்கலாம்.

அ16. 6674/08

**<u>தீர்மானம் எண்: 217</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

34. இந்நகராட்சி ஜெயராஜ் ரோடு வணிக வளாக கடை எண் 4— க்கு 3—4—2008ம் தேதி நடைபெற்ற ஏல/ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

1. ஆர். பால்ராஜ்
த/பெ பி. ராமசாமி
289 ரைஸ்மில் தெரு
வி.இ. ரோடு, தூத்துக்குடி ரூ 870/—(மாத வாடகை)

2.திரு D.A. ரவீந்திரன்
த/பெ து. அழகுபாண்டி
6, டூவிபுரம் 2ம் தெரு, தூத்துக்குடி ரூ 1065/— (மாத வாடகை)

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

ஜெயராஜ் ரோடு வணிக வளாக கடை எண் 4—க்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் திரு D.A.ரவீந்திரன் என்பவரின் உயர்ந்த கேள்வித்தொகை ரூ 1065/— ஆகும். மேற்படி கடைக்கு பலமுறை ஏலம் விட்டும் ஒப்பந்தப்புள்ளி கோரியும் எவரும் ஏலம் எடுக்க முன்வரவில்லை. எனவே மேன்மேலும் நகராட்சிக்கு ஏற்படும் வருவாய் இழப்பை தவிர்க்கும் பொருட்டு திரு D.A. ரவீந்திரன் என்பவரின் மாத வாடகை ரூ 1065/—ஐ ஏற்று கடையின் உரிமத்தினை அன்னாரின் பெயரில் உரிமம் வழஙக மன்றம் அனுமதிக்கலாம்.

அ16. 6675/08

**<u>தீர்மானம் எண்: 218</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

35. இந்நகராட்சி ஜெயராஜ் ரோடு வணிக வளாக கடை எண் 6– க்கு 3–4–2008ம் தேதி நடைபெற்ற ஏல/ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

1. திரு எஸ். சௌந்தர்ராஜ்
12,டூவிபுரம் 12ம் தெரு, தூத்துக்குடி ரூ 1055/–(மாத வாடகை)

2.திரு R. செல்வராஜ், ரூ 900/–
289, ரைஸ் மில் தெரு, வி.இ. ரோடு, தூத்துக்குடி (மாத வாடகை)

**அலுவலகக் குறிப்பு**

ஜெயராஜ் ரோடு வணிக வளாக கடை எண் 6–க்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் திரு எஸ். சௌந்தர்ராஜ் என்பவரின் உயர்ந்த கேள்வித்தொகை ரூ 1055/– என்பதாகும். மேற்படி கடைக்கு பலமுறை ஏலம் விட்டும் ஒப்பந்தப்புள்ளி கோரியும் எவரும் ஏலம் எடுக்க முன்வரவில்லை. எனவே மேன்மேலும் நகராட்சிக்கு ஏற்படும் வருவாய் இழப்பை தவிர்க்கும் பொருட்டு திரு எஸ். சௌந்தர்ராஜ் என்பவரின் மாத வாடகை ரூ 1055/–ஐ ஏற்று கடையின் உரிமத்தினை அன்னாரின் பெயரில் உரிமம் வழுங்க மன்றம் அனுமதிக்கலாம்.

அ16. 6673/08

**தீர்மானம் எண்: 219**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

36. இந்நகராட்சி மேலப்பெரிய காட்டன் ரோடு வணிக வளாக கடை எண் 193– க்கு 3–4–2008ம் தேதி நடைபெற்ற ஏல/ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

1. பி. சண்முகநாதன்
29, குமாரர் தெரு தூத்துக்குடி ரூ 4350/–(மாத வாடகை)

2. ஆர். பால்ராஜ்
289 ரைஸ்மில் தெரு
வி.இ. ரோடு, தூத்துக்குடி ரூ 3800/–(மாத வாடகை)

**அலுவலகக் குறிப்பு**

இந்நகராட்சி மேலப்பெரிய காட்டன் ரோடு வணிக வளாக கடை எண் 193–க்கு உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு பி. சண்முகநாதன் என்பவரின் மாத வாடகை கேள்வித்தொகை ரூ 4350/– என்பதாகும். அருகில் உள்ள கடை எண் 192 மாத வாடகையை விட ரூ 150/– கூடுதலாக உள்ளது. எனவே திரு பி. சண்முகநாதன் என்பவரின்உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி மாத வாடகை ரூ 4350/–க்கு உரிமம் வழுங்க மன்றம் அனுமதிக்கலாம்.

அ16. 6677/08

**தீர்மானம் எண்: 220**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

37. இந்நகராட்சிக்கு சொந்தமான ஜெயராஜ் ரோடு வணிக வளாக கடை எண் 30– க்கு 3–4–2008ம் தேதி நடைபெற்ற ஏல/ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

1. சி. முத்துகல்பனா
த/பெ பாலகிருஷ்ணன்

36B/6 டூவிபுரம் மெயின் ரோடு, தூத்துக்குடி .. ரூ1060/–
(மாத வாடகை)

2. ஆர். தனமுருகன்
1/316பி மீளவிட்டான் சின்னகண்ணுபுரம் ரூ 870/–
(மாத வாடகை)

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

ஜெயராஜ் ரோடு வணிக வளாக கடை எண் 30–க்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் திரு சி. முத்துகல்பனா என்பவரின் உயர்ந்த கேள்வித்தொகை ரூ1060/– ஆகும். மேற்படி கடையை பலமுறை ஏலம் விட்டும் ஒப்பந்தப்புள்ளி கோரியும் எவரும் ஏலம் எடுக்க முன்வரவில்லை. எனவே மேன்மேலும் நகராட்சிக்கு ஏற்படும் வருவாய் இழப்பை தவிர்க்கும் பொருட்டு திருசி. முத்து கல்பனா என்பவரின் மாத வாடகை ரூ1060/–ஐ ஏற்று கடையின் உரிமத்தினை அன்னாரின் பெயரில் உரிமம் வழஙக மன்றம் அனுமதிக்கலாம்.

அ16. 6672/08

**<u>தீர்மானம் எண்: 221</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

**38.** இந்நகராட்சிக்கு சொந்தமான புதிதாக கட்டப்பட்டுள்ள நவீன முறையில் ஆடு அறுக்கும் இடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் நேரடி அறிவுரைப்படி இயக்ககம் மற்றும் பராமரிப்பு (Operation and maintenance) முறையில் தொண்டு நிறுவனஙகள் அல்லது தகுதிவாய்ந்த பிற நிறுவனஙகளிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி கோர நடவடி0க்கை எடுக்கப்பட்டு வருகிறது. எனவே ஏற்கனவே உள்ள ஆடு அறுக்கும் உரிமைக்கு வழஙகப்பட்ட குத்தகை காலம் 31–3–2008 உடன் முடிவடைவதால் நவீன முறையில் கட்டப்பட்டுள்ள ஆடு அடிக்கும் நிலையத்திற்கு உரிமம் வழஙகும் வரை கட்டணம் வசூலிக்கும் பணியை 1–4–2008 முதல் துறை மூலம் வசூல் பணி மேற்கொள்ளவும் அதற்கு ஆடு 1க்கு ரூ 10/– ம் மாடுக்கு ரூ 20/–ம் நிர்ணயம் செய்து வசூல் செய்யவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>** மன்றம் அனுமதிக்கலாம்.

நகஎண் 16294/2007/அ16

**<u>தீர்மானம் எண்: 222</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

39. இந்நகராட்சியில் நவீன முறையில் சொந்தமாக கட்டப்பட்டுள்ள ஆடு அறுக்கும் தொட்டியில் கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் நேரடி அறிவுரைகளின்படி தொண்டு நிறுவனம் அல்லது தகுதிவாய்ந்த பராமரிப்பு நிசறுவனஙகள் அல்லது தகுதியுள்ள பிற ஏஜன்சிகள் ஆகியோர்களிடமிருந்து இயக்ககம் மற்றும் பராமரிப்பு (Operation and maintenance) முறையில் பராமரிக்க ஒப்பந்தப்புள்ளி கோரி ஒப்படைப்பு செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் பேரில் 2008–09ஆம் வருடத்திற்கான உரிமத்திற்கு இத்துடன் இணைக்கப்பட்டுள்ள நிபந்தனைகளின்படி கட்டிட பராமரிப்பிலும் குறைந்தது 5 வருட அனுபவமும் பாதுகாப்பான முறையில் இறைச்சியை வெட்டி பேக்கிங செய்து விற்பனைக்கு அனுப்புவதற்கேற்ற அனுபவமும் இருத்தல் வேண்டும் என்ற நிபந்தனைகளுக்குட்பட்டும் ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>** மன்றம் அனுமதிக்கலாம்.

நகஎண் 16294/2007/அ16

**<u>தீர்மானம் எண்: 223</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

40. நகர்மன்ற தலைவர் அவர்கள் அலுவலக பணி நிமித்தமாக பெப்ரவரி மற்றும் ஏப்ரல் 2008ஆம் மாதத்தில் சென்னை, சென்று வந்ததற்கான பயணப்பட்டியல் சமர்ப்பித்துள்ளார்கள். இதனை வழஙக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u> 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழஙகியதை அஙகீகரிக்கலாம்.

நகஎண் பி4. 4613/08

**<u>தீர்மானம் எண்: 224</u>**

அலுவலகக் குறிப்பு 1 அனுமதிக்கப்பட்டது
அலுவலகக்குறிப்பு 2 அஙகீகரிக்கப்பட்டது

41. இந்நகராட்சியின் பொது சுகாதார பிரிவில் துப்புரவு பணியாளராக பணிபுரிந்து 31–1–08 ல் ஓய்வுபெற்ற திருமதி சுப்பம்மாள்/ சுப்பன் என்பவருக்கு சிறப்பு சேமநலநிதி சந்தா ரூ 2880/– வட்டி ரூ 1930/– மற்றும் பஙகுத்தொகை ரூ 10,000/– சேர்த்து ரூ 14,810/– பொது நிதியிலிருந்து வழஙக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம்.

எச்2. 1906/08

**<u>தீர்மானம் எண்: 225</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

42. மாவட்ட ஆட்சியர் அவர்களது செயல்முறை கடிதம் நகஎண் அ2. 4852/07–1 நாள் 31–3–2008ல் " நமக்கு நாமே'' திட்டத்தின் கீழ் 2007–2008ஆம் ஆண்டிற்கு கீழ்க்கண்ட பணிகள் செய்ய நிர்வாக அனுமதி வழஙகி உத்திரவிடப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கும் தகவலுக்கும் வைக்கப்படுகிறது.

| | | மதிப்பீடு |
|---|---|---|
| 1. | அசோக் நகர் 8வது தெருவிலுள்ள பூஙகாவில் சுற்றுச்சுவர் மற்றும் விளையாட்டுச் சாதனஙகள் அமைத்தல் பணி | ரூ 1,70,000/– |
| 2. | அசோக் நகர் 4வது தெருவிலுள்ள பூஙகாவில் சுற்றுச்சுவர் மற்றும் விளையாட்டு சாதனம் அமைத்தல். | ரூ 1,50,000/– |

அலுவலகக் குறிப்பு : 1. பதிவு செய்யலாம்.
2. அரசாணைப்படி மேற்கண்ட பணிகளுக்குரிய தொகையில் 50% பஙகளிப்பு தொகை ஏற்கப்பட்ட மெசர்ஸ் ஏ.வி.எம். மாரிமுத்து நாடார் டிரஸ்ட் அவர்களுக்கு 1வது பணியினையும் , பி. ஸ்டாலின் சாம்ராஜ்க்கு தூத்துக்குடி 2வது பணியினை செய்யவும் நேரடியாக பணி உத்திரவு வழஙகியதையும் மன்றம் பதிவு செய்யவும்.

இ1. 22637/07

**<u>தீர்மானம் எண்: 226</u>**

அலுவலகக் குறிப்பு 1, 2 பதிவு செய்யப்பட்டது

43. இந்நகராட்சிக்கு சொந்தமான வல்லநாடு தலைமை நீர் பணியிடத்தில் உள்ள 500 கேவிஏ திறன்கொண்ட மின்மாற்றிகளுக்கு (Transformer) பதிலாக கூடுதல் திறன் கொண்ட 800 கேவிஏ திறனுள்ள மின்மாற்றிகள் இரண்டு எண்ணங்கள் (One stand bye)புதிதாக விநியோகம் செய்து பொருத்தி அது தொடர்பாக பணிகள் செய்து இயக்கித் தரும் பணிக்கு 28–3–2008 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வஎண் | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விபரம் |
|---|---|---|
| 1 | மெசர்ஸ் சரயு கான்ட்ராக்டர்ஸ் அன்ட்கன்ஸ்சல்டண்ட், திண்டுக்கல்–1 | 0.10% சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவு<br>டேவணித்தொகை செலுத்தியுள்ளார்கள் |
| 2 | மெசர்ஸ்.குளோபல் எலக்ட்ரிகல்ஸ், கோயம்புத்தூர் –45 | 0.034% சதவிகிதம் மதிப்பீட்டை விட கூடுதல்<br>டேவணித்தொகை செலுத்தியுள்ளார்கள். |

**அலுவலகக் குறிப்பு** : 1. வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைந்த விலை விகிதம் கொடுத்துள்ள M/s Sarayu Contractors and Consultants, Dindigul எனும் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.

2. மன்றத் தீர்மான எண் 571, 26–9–2007ஆம் தேதியில் மன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

3. மேற்படி பணிக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் நிர்வாக அனுமதி எண் 65530/07/இ1 நாள் 3–1–2008படியும் மற்றும் மண்டல செயற்பொறியானர் அவர்களின் தொழில் நுட்ப அனுமதி 7312/07/ஆ1 நாள் 21–2–2008.படியும் அனுமதி பெறப்பட்டுள்ளது.

மபஎண் 257/2007–08

**<u>தீர்மானம் எண்: 227</u>**

அலுவலகக் குறிப்பு 1 அங்கீகரிக்கப்பட்டது
அலுவலகக்குறிப்பு 2 மற்றும் 3 பதிவு செய்யப்பட்டது

44. இந்நகராட்சிக்கு சொந்தமான ஜெராக்ஸ் இயந்திரம் பழுதானதால் மார்ச் 2008 மாதத்திற்கான நகர்மன்ற கூட்டப்பொருள்கள் ஏ.பி.எஸ். ஜெராக்ஸ் அன்ட் கம்ப்யூட்டர்ஸ், தூத்துக்குடி நிறுவனம் மூலம் ஜெராக்ஸ் எடுக்கப்பட்டு அலுவலக உபயோகத்திற்காக பயன்படுத்தப்பட்டது. மேற்படி மன்றக் கூட்டப்பொருள்கள் ஜெராக்ஸ் எடுத்ததற்குரிய செலவினம் ரூ 2420/– (ரூபாய் இரண்டாயிரத்து நானூற்று இருபது மட்டும்) வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** : 1. அனுமதிக்கலாம்.

2. அலுவலக அவசர அவசியத்தை முன்னிட்டு நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கப்பட்டதை

அங்கீகரிக்கலாம்.

பி3. 5615/07

**<u>தீர்மானம் எண்: 228</u>**

அலுவலகக் குறிப்பு 1 அனுமதிக்கப்பட்டது
அலுவலகக்குறிப்பு 2 அங்கீகரிக்கப்பட்டது

**45.** இந்நகராட்சி மேற்கு எல்கையிலிருந்து சுமார் 3. 54 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள கோரம்பள்ளம் என்ற கிராமத்திலிருந்து பக்கிள் ஓடை ஆரம்பித்து இறுதியில் இந்நகராட்சியின் கிழக்கு பகுதியான திரேசபுரம் பகுதியில் அதாவது மன்னார் வளைகுடாவில் சங்கமம் ஆகிறது.

பக்கிள் ஓடையானது இந்நகராட்சிப் பகுதியில் செல்லும் நீளம் 6. 567 கிலோ மீட்டராகும். மேற்படி பக்கிள் ஓடையின் சீரமைப்பு பணி சம்பந்தமாக திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு பக்கிள் ஓடையின் இருபுறமும் சாலைகளும், பூஙகாக்களும் மற்றும் அபிவிருத்தி பணிகளும் மேற்கொள்ள ரூ 35. 00 கோடி மதிப்பீட்டில் செயலாக்கம் திட்டம் தீட்டப்பட்டுள்ளது.

இந்நிலையில் ஆண்டாள் தெரு அதாவது கருத்த பாலத்தின் வடகிழக்கு பகுதியில் பக்கிள் ஓடையை ஒட்டியுள்ள அரசு நிலத்தினை கீழ்க்கண்ட விபரப்படி தனி நபர்களுக்கு பட்டா வழுஙகப்பட்டுள்ளது. இதனால் மேற்கண்ட பக்கிள் ஓடையின் அகலம் கருத்தபாலத்தை யொட்டியுள்ள பகுதியில் 20 மீட்டர் மட்டுமே உள்ளது. பக்கிள் ஓடையின் இருபுறமும் சீரமைப்பு பணிக்கு மேற்கண்ட இடம் போதுமானதாக இல்லை. எனவே கீழ்க்கண்ட புல எண்கள் உள்ள இடத்தில் பக்கிள் ஓடையின் அகலத்தை விரிவுபடுத்த நகராட்சியால் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| வார்டு எண் 4, பிளாக் எண் 21பி புல எண் 3450/1 | .. 390 ச.மீ. |
| வார்டு எண் 4, பிளாக் எண் 21பி புல எண் 3450/6 | .. 280 ச.மீ. |
| வார்டு எண் 4, பிளாக் எண் 21பி புல எண் 3450/11 | .. 204. 5 ச.மீ. |
| வார்டு எண் 4, பிளாக் எண் 21பி புல எண் 3450/13 | .. 213. 0 ச.மீ. |
| | 1015. 5 ச.மீ |

எனவே தனி நபர்களுக்கு வருவாய்துறை மூலம் பட்டா வழுஙகப்பட்டுள்ள மேற்படி 1015. 5 ச.மீட்டர் பரப்பளவு உள்ள இடஙகளுக்கு வழுஙகப்பட்ட பட்டாக்களை ரத்துச் செய்தும்

புல எண் 3450/2– 195. 5 ச.மீ ஜி.ஆர். நத்தமாக உள்ள இடத்தினை நகராட்சிக்கு நில உரிமை மாற்றம் செய்து நகராட்சிக்கு நிலத்தினை வழுஙக மாவட்ட ஆட்சியருக்கு கருத்துரு அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.

எப்1. 23428/04

**<u>தீர்மானம் எண்: 229</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

**46.** இந்நகராட்சிக்கு சொந்தமான புதிய பேரூந்து நிலைய கடை எண் 63க்கு 26–2–2008ஆம் தேதி நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

1. திரு எஸ். பி. வெஙகடேஷ் ரூ 1500/–
த/பெ எஸ். பழனிவேல் (மாத வாடகை)
505பி ஜார்ஜ் ரோடு, தூத்துக்குடி

2. திரு பி. முருகேசன் ரூ 1200/–
52, வடக்கு ரதவீதி தொடர்ச்சி, தூத்துக்குடி (மாத வாடகை)

**அலுவலகக் குறிப்பு** :

இந்நகராட்சி புதிய பேருந்து நிலைய கடை எண் 63க்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்த திரு எஸ்.பி. வெஙகடேஷ் த/பெ எஸ். பழனிவேல் என்பவரின் மாத வாடகை ரூ 1500/– முந்தைய மாத வாடகை ரூ1,488/–ஐ விட ரூ 12/– கூடுதலாக உள்ளது. எனவே திரு எஸ்.பி. வெஙகடேஷ் என்பவரின் மாத வாடகை ரூ 1500/–க்கு உரிமம் வழஙக மன்றம் அனுமதிக்கலாம்.

அ16. 5703/08

**<u>தீர்மானம் எண்: 230</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

47. இந்நகர்மன்றத் தலைவர் அவர்கள் அலுவலகப் பணியின் நிமித்தமாக 15–4–2008 முதல் 17–4–2008ம் தேதி வரை சென்னை சென்று வந்ததற்கான பயணப்பட்டியல் மன்றத்தின் அஙகீகாரத்திற்காக வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** : மன்றம் அஙகீகரிக்கலாம்.

நமத. 4/2008

**<u>தீர்மானம் எண்: 231</u>**

அலுவலகக் குறிப்புப்படி அஙகீகரிக்கப்பட்டது

48. இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இந்நகராட்சியில் உள்ள 20 வார்டுகள் தனியார் மூலம் குப்பை அள்ளும் பணிக்கு பொறியர் பிரிவு மூலம் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு 2007 முதல் பணிகள் நடைபெற்று வருகிறது. குப்பை அள்ளும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்படும் போது அதே 20 வார்டுகளில் உள்ள கழிவுநீர் ஓடைகளில் உள்ள மண்களை அப்புறப்படுத்த ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு முடிவு செய்யப்பட்டுள்ளது. வருடத்திற்கு கழிவு மண் மொத்தம் எடை 5140 M3 க்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. சராசரியாக 1 M 3 க்கு ரூ 100/– என ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. அதற்கான வருடாந்திர செலவு ரூ 5,14,000/–ஆகும். எனவே கழிவுநீர் ஓடையிலுள்ள மண்ணை அப்புறப்படுத்த உத்தேச செலவுத்தொகை ரூ 5. 50 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. தொகையை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**குறிப்பு** : அனுமதிக்கலாம்.

எச்1. 254/2007

**<u>தீர்மானம் எண்: 232</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

**49.** தூத்துக்குடி நகராட்சி ஆணையர் அவர்கள் அலுவலக பணி காரணமாக திருநெல்வேலி, மதுரை மற்றும் சென்னை ஆகிய இடங்களுக்கு மார்ச் 2008ஆம் மாதத்தில் பயணம் சென்று வந்ததற்கான பயணப்பட்டியல் மன்றத்தின் அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** மன்றம் அங்கீகரிக்கலாம்.

சி1. 5495/08

**தீர்மானம் எண்: 233**

அலுவலகக் குறிப்புப்படி அங்கீகரிக்கப்பட்டது